***Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 5(Special Issue I) 2022***
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Accepted: 21st September 2022*

# PERSPECTIVE ON ISLAMIC WOMEN'S CLOTHING AMONG OTHER RELIGIONS: STUDY BASED UNDERGRADUATE STUDENTS

M.N. Fathima
Department of Geography, Faculty of Arts,
University of Colombo, Sri Lanka.
fathynisha143@gmail.com

## Abstract

*Humans have different customs, cultures and values depending on the environment in which they live. Clothing is no exception. But Islamic women's clothing is seen as one of the most talked about topics in Sri Lanka in recent times, facing many controversies worldwide. The main reason for this is the misunderstandings that exist among people from other communities. This study, therefore, examines the perspective on Islamic women's clothing among non-Muslims, based on the University of Colombo, Sri Lanka, and presents how steps can be taken to mitigate the misconceptions among them. The objectives of this study are to explore the clarity that can be found among Muslim women regarding the dress code that Islam imposes on women, to examine the perspective of other religions on Islamic dress and if negative thoughts are found among other religions, to find out the reason and make suggestions to mitigate them. This study is a descriptive statistical study. Samples were selected through convenience sampling at the Faculty of Arts, University of Colombo and to obtain the primary data 100 Questionnaire were given to obtain through the online medium (Google form). Secondary data such as books, research articles, dissertations and the Internet were also used to obtain additional data. 28% of those surveyed did not have a proper understanding of Islamic women's cloths. A further 11.9 % believed women were being oppressed because of such clothing. Hence organizing cultural events (Hijab Day) among students to discredit such misunderstandings, women often care about their color when choosing their clothes, avoid black clothing, in cases where they are able to work with the majority community especially during group activities, fully express their personalities while remaining within the Islamic rules and resolving their doubts by interacting beautifully with other communities are recommended in this study.*

***Keywords:*** *Islamic cloth, Perspective, women*

### *1. அறிமுகம்*

*இஸ்லாத்தில், ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் தமது அவ்ரத்தை மறைக்கக் கூடிய முறையில் மரியாதையான உடை அணிய வேண்டும் என்பது முக்கியமாகும். எனவே, முஸ்லிம் பெண்கள் சிறப்பு ஆடைகளை வைத்திருக்கிறார்கள், அவர்கள் சில சமயங்களில் தங்களை பாதுகாப்பதற்காக இவ்வாறான ஆடைகளை தெரிவு செய்கிறார்கள். இஸ்லாமிய பார்வையில் ஆடை எனப்படுவது வெறுமனே பாதுகாப்பிற்காகவும் அழகிற்காகவும் மாத்திரமல்லாது இறைவனின் கட்டளையை நிறைவேற்றுதலுக்காக அணியப்படுகின்றது. அவ்வாறு பெண்கள் அணியும் இஸ்லாமிய கலாச்சார ஆடைகளை ஹிஜாப், நிகாப், புர்கா என பிரதானமாக 3 வகைப்படுத்தலாம். முதலாவதாக ஹிஜாப் குறித்து நோக்குவதாயின், இது முஸ்லிம் பெண்கள் அணியும் தலைக்கவசத்தின் பெயராகும். அவை பலவிதமான வடிவமைப்பிலும் வர்ணங்களிலிலும் வருகின்றன. இவ்வகையான ஆடையானது பெரும்பாலும் பெண்களின் தலை, மார்பு பகுதி மற்றும் கழுத்து என்பவற்றை மறைக்க அணியப்படுகின்றன. ஆனால் ஹிஜாப் அணியும் போது பெண்;களின் முகம் மறைக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக புர்கா எனப்படுவது ஒரு பெண்ணின்*

முகத்தையும் உடலையும் முழுவதுமாக உள்ளடக்கி அணியப்படும் ஆடையாகும் (Hakeema Beevi et al., 2021). பொதுவாக புர்கா எனப்படுவது ஒரு துண்டு துணியின் மூலம் முழு உடலையும் மறைக்கும் வகையில் தயாரிக்கப்படுவதோடு, அதில் முன்புறத்தில் தைக்கப்படுகின்ற மெல்லிய துணி மூலம் பார்க்க முடிகிறது. நிகாப் எனப்படுவது ஒரு முகத்திரையாகும். பொதுவாக நிகாப் அணியும்போது, இஸ்லாமிய பெண்கள் தலையை மறைப்பதோடு, முகத்தையும் மறைப்பர். ஆனால் கண்கள் மறைக்கப்பட்டிருக்காது. இவ்வாறாக இஸ்லாமிய பெண்களின் ஆடைகளை வகைப்படுத்தி நோக்கலாம்.

உலகலாவிய ரீதியில் நோக்கும்போது பல மேற்குலக நாடுகள் இஸ்லாமிய ஆடையான புர்கா மற்றும் நிகாப் போன்றவற்றிற்கு தடைகளை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான நாடுகளில் பெரும்பாலனவை ஐரோப்பிய நாடுகளான நெதர்லாந்து, டென்மார்க், அவுஸ்ரியா, பல்கேரியா, பெல்ஜியம், பிரான்ஸ் என்பனவாகும். இந்நாடுகள் முறையே 2005, 2018, 2017, 2016, 2011 ஆகிய வருடங்களில் புர்கா தடைச் சட்டத்தை அமுல்படுத்தின. இதுதவிர ஏனைய ஐரோப்பிய நாடுகளான இச்சட்டத்திற்கு அமைய இந்நாடுகளில் புர்கா மற்றும் நிகாப் போன்ற இஸ்லாமிய ஆடைகளை அணிவது சட்டவிரோதமாகும். இந்நாடுகளில் பெரும்பாலனவை முழுமையாக முகக்கவசம் அணிவதை (மாஸ்க், முழுமையாக மூடப்பட்ட தலைக்கவசம், புர்கா மற்றும் நிகாப் உட்பட) தடுக்கும் அதேவேளை சிலநாடுகள் இஸ்லாமிய பெண்களின் முகத்தை மறைக்கக் கூடிய ஆடைகளை மட்டுமே தடுத்துள்ளன. இதனால் இச்சட்டம் ' Burqa ban' புர்தா தடைச் சட்டம் என்று அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையைப் பொருத்தவரை பல்லின, பன்மொழி, மற்றும் பல்கலாசாரத்தை பின்பற்றுகின்ற மக்களைக் கொண்ட நாடாகும். இங்கு ஆரம்ப காலங்களில் கலாச்சார ரீதியான பிளவுகள் காணப்படாத போதிலும் அண்மைக்காலங்களில் அதிலும் குறிப்பாக 2019ஆம் ஆண்டு நிகழ்ந்த ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து அதிகளவிலான பாகுபாடுகள் மற்றும் கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக சிறுபான்மைச் சமூகமான இலங்கை முஸ்லிம்களின் (பெண்கள்) ஆடை பல்வேறு அரங்குகளிலும் பேசுபொருளாக காணப்பட்டது எனலாம். ஆகவே இவ்வாறான சூழ்நிலையில் பிறமதத்தவர்கள் மத்தியில் இஸ்லாமிய ஆடைகள் தொடர்பான தவறான புரிதல்களை களைவது அவசியமாகும்;. எனவே இவ்வாய்வானது இஸ்லாமிய பெண்களின் ஆடை தொடர்பாக பிற சமயத்தவர்கள் எவ்வாறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர் என்பதனை இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து, அவர்கள் மத்தியில் தவறான கண்ணோட்டம் காணப்படும் பட்சத்தில் அவற்றை இழிவளவாக்குவதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதனை முன்வைக்கின்றது.

### 2. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் பிரதான நோக்கம், இலங்கை ஒரு பல்லின சமுதாயத்தைக் கொண்ட நாடு எனும் வகையில், இஸ்லாமிய பெண்களின் ஆடை தொடர்பாக பிற சமயத்தவர்கள் எவ்வாறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர் என்பதனை இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழக கலைபீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து, அவர்கள் மத்தியில் தவறான கண்ணோட்டம் காணப்படும் பட்சத்தில் அவற்றை இழிவளவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்வைப்பதே ஆகும். இப்பிரதான நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு பின்வரும் உபநோக்கங்களையும் இவ்வாய்வானது கொண்டுள்ளது.

- இஸ்லாம் பெண்களிற்கு விதித்துள்ள ஆடைகள் தொடர்பான சட்டம் தொடர்பாக முஸ்லிம் பெண்கள் மத்தியில் காணப்படக்கூடிய தெளிவினை ஆராய்தல்.
- இஸ்லாமிய ஆடைகள் தொடர்பாக பிற சமயத்தவர்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்தை ஆராய்தல்.
- பிற சமயத்தவர்களிடையே எதிர்மறையான எண்ணங்கள் காணப்படுமாயின், அதற்கான காரணத்தை அறிதலும் அவற்றை இழிவளவாக்குவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தலும்.

***3. ஆய்வு முறையியல்***

*இவ்வாய்வானது விபரண ரீதியிலான புள்ளிவிபரவியல் ஆய்வாகும். மேலும் இவ்வாய்வுக்காக ஆய்வின் இலக்கினையும், நோக்கத்தினையும் அடைந்து கொள்ளும் பொருட்டு அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. துல்லியமான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின், கலை பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் நிகழ்தகவற்ற மாதிரியெடுப்பு மூலம மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு, 100 வினாக்கொத்துகள் நிகழ்நிலை மூலம் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட வினாக்கொத்து பிரதானமாக மூன்று பகுதிகளைக் கொண்டு அமையப் பெற்றிருந்தமை குறிப்பட்த்தக்கது. முதலாம் பகுதியினூடாக தனிப்பட்ட தகவல்கள் தொடர்பாகவும், ஏனைய இரு பகுதிகளினூடாக ஆய்வுக்கான தரவுகளைப் பெறும் முகமாக பல்வேறு வினாக்களை உள்ளடக்கியும் வினாக்கொத்து காணப்பட்டது. மேலும், கலை பீட முஸ்லிம் மாணவர்களுடன் கட்டமைக்கப்படாத நேர்காணல் மூலமாகவும் பல்வேறு தரவுகள் ஆய்வுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டன. அத்தோடு மேலதிக தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இரண்டாம் நிலைத்தரவுகளான புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வறிக்கைகள், மற்றும் இணையம் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் யாவும் MS Excel மற்றும் SPSS 16.0 மூலம் தரவுப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.*

**3. இலக்கிய மீளாய்வு**

Hass *மற்றும்* Lutek (2019) *எழுதிய* Fashion and Faith: Islamic Dress and Identity in The Netherlands *எனும் ஆய்வானது, ஆடைக்கும் அடையாளத்திற்கும் இடையிலான உறவில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக, இது டச்சு முஸ்லிம் பெண்களின் அடையாளத்தை வடிவமைப்பதில் இஸ்லாமிய ஆடைகள் தொடர்பான ஆய்வாகும். இந்த டச்சு முஸ்லீம் பெண்கள் தமது ஆடைகள் மூலம் தங்கள் அடையாளத்தை எவ்வாறு வடிவமைக்கிறார்கள்? அவர்கள் டச்சு அளவுருக்களை தங்கள் முஸ்லிம் அடையாளத்தில் கலக்கிறார்களா? அதே நேரத்தில் இஸ்லாமிய கொள்கைகளை தங்கள் டச்சு அர்த்தத்தில் ஒன்றிணைக்கிறார்களா? என்ற வினாக்களுக்கு விடை கண்டுள்ளது. இந்த ஆய்வின் அதன் கருப்பொருள் நெதர்லாந்தில் இஸ்லாம் பெரும்பாலும் மக்களால் அடக்குமுறை மற்றும் பெண்களுக்கு பாகுபாடு காட்டும் ஒரு மதமாக கருதப்படும் சூழலில், மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், இந்த பெண்கள் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்று இந்த ஆய்வுக் கட்டுரை வாதிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

Islam's (In)compatibility with the West: Dress Code Restrictions in the Age of Feminism *எனப்படும் ஆய்வுக்கட்டுரையானது, அரசாங்கங்கள் பெரும்பாலும் ஒழுங்குமுறைகளை நியாயப்படுத்த பாலின சமத்துவத்தினை மேற்கோள் காட்டுகின்றன. சில பெண்கள் ஹிஜாப் அணிய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்பது உண்மைதான் என்றாலும், பல பெண்கள் விருப்பப்படி மறைக்கிறார்கள். இந்த பெண்களின்*

*தேர்வுகள் அவர்களின் நம்பிக்கையில் வேரூன்றக்கூடும், ஆனால் முடிவுகள் பொதுவாக கலாச்சாரம் போன்ற பிற காரணிகளுடன் இணைக்கப்படுகின்றன. எனவே, இந்த ஆய்வானது, பெண்களின் ஆடை தொடர்பான தடைகள், பெண்ணின் உரிமைகளை மேம்படுத்தாது என வாதிட்டுள்ளது. அரசாங்கங்கள் தடைகள், மதச்சார்பற்றவை அவை சுகாதார அடிப்படைகளைக் கொண்டவை என்று குறிப்பிட்டாலும், இந்த ஆய்வில் அக்கொள்கைகளிற்கு எதிராக வாதிடப்பட்டுள்ளது. இறுதியில், இவ்வாய்வு மேற்கத்திய நாடுகள் அவற்றின் தேர்வை ஒரு மதத்தின் மீது கட்டாயப்படுத்த முயற்சிக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது* (La Fornara, 2018).

***4. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்***

*சமீபத்திய ஆண்டுகளில் முஸ்லிம்களின் ஆடை ஏனைய சமயத்தவர்கள் மத்தியில் மிகுந்த கவனத்தை ஈர்த்துள்ளது. சில குழுக்கள் இஸ்லாமிய பெண்களின் ஆடைகள் மீதான கட்டுப்பாடுகளை இழிவுபடுத்துகின்றன அல்லது தடைவிதிக்கின்றன. சில ஐரோப்பிய நாடுகள் இஸ்லாமியரின் ஆடை பழக்கவழக்கங்களை சட்டரீதியாக தடைசெய்துள்ளன. அவ்வாறான நாடுகளாக நெர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம், பல்கேரியா, அவுஸ்ரியா, பிரான்ஸ் என்பவற்றை குறிப்பிடலாம். இதுதவிர ஜேர்மனி, சுவிஸ்லாந்து, எஸ்டோனியா, லத்துவியா, வித்துவேனியா மற்றும் நோர்வே போன்ற நாடுகளும் இவ்வாறான ஆடைகளை சட்டரீதியாக தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றன. இதேநிலை அண்மையில் (ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலிற்கு பின்னர்) இலங்கையிலும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த சர்ச்சைகள் பெரும்பாலும் இஸ்லாமிய ஆடை விதிகளுக்குப் பின்னால் உள்ள காரணங்கள் குறித்த தவறான கருத்திலிருந்தே உருவாகிறது. உண்மையில், முஸ்லிம்கள் அணியும் விதம் எளிமையான அடக்கத்திலிருந்தும், எந்த வகையிலும் ஏனையவர்களின் கவனத்தை ஈர்க்காத விருப்பத்திலிருந்தும் வெளிப்படுகின்றது.*

*பெண்களின் ஆடை தொடர்பாக இஸ்லாம் கூடிய கவனம் செலுத்துகின்றது எனலாம். ஏனெனில் இஸ்லாம் ஒரு பரிபூரணமான மார்க்கமாகும். எனவே மனித வாழ்வில் அவன் கடைபிடிக்க வேண்டிய பொது விடயங்கள் உட்பட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பற்றி வழிகாட்டும் மார்க்கமாக இஸ்லாம் கருதப்படுகிறது. அந்தவகையில் முஸ்லிம்கள் அணிய வேண்டிய ஆடை குறித்தும் இஸ்லாமிய மூலாதாரங்களான அல் குர்ஆன் மற்றும் அல் ஹதீஸ் என்பவற்றில் பின்வருமாறு வழிகாட்டப்பட்டுள்ளது. 'இன்னும்; முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது இன்னும் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்;....'(24:31) என பெண்களின் ஆடை தொடர்பாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மற்றுமொரு இடத்தில் 'ஆதமுடைய மக்களே! மெய்யாகவே, நாம் உங்களுக்கு உங்களுடைய மானத்தை மறைக்கவும், உங்களுக்கு அலங்காரமாகவும், ஆடையை அளித்துள்ளோம். ஆயினும் தக்வா (பயபக்தி) எனும் ஆடையே (அதைவிட) மேலானது. இது அல்லாஹ்வுடைய (அருளின்) அடையாளங்களில் (ஒன்றாக) உள்ளதாகும் - (இதைக் கொண்டு) நல்லுணர்வு பெறுவார்களாக' (07:26) என அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள அல்குர்ஆன் வசனங்களின் மூலம், ஆடை எனப்படுவது மனிதனுக்கு பாதுகாப்பளிக்கக் கூடிய ஒன்றாக நோக்கப்பட்டுள்ள அதேவேளை அலங்காரமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பாக எந்த பாகங்களை மூடவேண்டும் என குறிப்பிடப்படவில்லை என்றாலும் அலங்காரத்தை*

மறைத்துக்கொள்ளுமாறு கட்டளை இட்டுள்ளது. அந்தவகையில் ஆண்கள் உடலில் மறைக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச அளவு தொப்புள் மற்றும் முழங்காலுக்கு இடைப்பட்ட பகுதியாகும். இருப்பினும், கவனத்தை ஈர்க்கும் சூழ்நிலைகளில் வெற்று மார்பு முகம் சுளிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெண்களைப் பொருத்தவரையில் எவ்வாறான ஆடைகளை அணிய வேண்டும் என்பதற்கும், எவ்வாறான ஆடைகளை அணியக் கூடாது என்பதற்கும் பல நபிமொழிகள் சான்றாக உள்ளன. அதற்கமைய பெண்களின் ஆடை தொடர்பாகவுள்ள ஹதீஸ்களை தொகுத்து நோக்கும் போது, இறுக்கமான ஆடைகள், மெல்லிய ஆடைகள், ஆண்களை ஒத்திருக்கும் ஆடைகளை அணிதல், ஆடை அணிந்தும் நிர்வானமாக இருத்தல், பொய் முடி அணிதல், உடல் கட்டமைப்பை வெளிக்காட்டும் வகையில் ஆடை அணிதல் போன்றவற்றை முற்றாக தவிர்ந்துகொள்ள வேண்டும். அதேவேளை எவ்வாறான ஆடைகளை பெண்கள் அணிய வேண்டும் என்பது தொடர்பாக நோக்கும் போது பின்வருவனவற்றை குறிப்பிடலாம்:

- கழுத்து மற்றும் தலையை மறைக்கக் கூடிய ஆடைகள்.
- மார்பகங்களை மறைக்கக் கூடிய ஆடைகள்
- கரண்டைக்காலை மறைக்கக் கூடிய ஆடைகள்

| மாரி | கட்டமைப்புப் பண்புகள் | சதவீதம் |
|---|---|---|
| பால் | ஆண்கள் | 50% |
| | பெண்கள் | 50% |
| சமயம் | இந்து | 23% |
| | கிறிஸ்த்தவம் | 13% |
| | பௌத்தம் | 64% |

*அட்டவணை 01: பங்கேற்பாளர்களின் கட்டமைப்புப் பண்புகள்*

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் கட்டமைப்பு பண்புகள் தொடர்பாக அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய பங்கேற்பாளர்களில் 50 ஆண்களும் 50 பெண்களும் காணப்பட்டனர். சமய அடிப்படையில் நோக்கும் போது 23 இந்து மாணவர்கள், 13 கிறிஸ்த்தவ மாணவர்கள் மற்றும் 64 பௌத்த மாணவர்கள் காணப்பட்டனர். இவ்வாய்வின் அடிப்படையில் ஆடை தொடர்பாக முஸ்லிம் பெண்கள் மத்தியில் காணப்படக்கூடிய தெளிவு குறித்து வினவப்பட்டபோது, இலங்கை பன்மைத்துவ கலாச்சாரத்தைக் கொண்டிருக்கும் நாடாக இருந்தபோதிலும், இஸ்லாமிய பெண்கள் அவர்களின் மார்க்க வழிகாட்டுதலிற்கு அமைவாகவும், அதேவேளை அவர்களின் விருப்புக்களிற்கு ஏற்பவும் பல்வேறு விதமான ஆடைகளை தெரிவுசெய்து அணிகின்றனர் என்பதை அறிய முடிந்தது. இதனை அட்டவணை 02 இல் அவதானிக்கலாம்.

| ஆடை வகை | | வீதம் |
|---|---|---|
| ஹிஜாப் | அபாயா | 28.5% |
| | ஏனையவை | 43% |
| நிகாப் | | 0% |
| புர்கா | | 0% |
| தாவணி | | 28.5% |

அட்டவணை - 02: கொழும்பு பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களின் ஆடையமைப்பு


இங்கு காட்டப்பட்டுள்ள அட்டவணை - 02 இற்கு அமைய, அதிகளவிலான (71.5%) மாணவர்கள் ஹிஜாப் அணியக் கூடியவர்களாக உள்ளனர். இவர்களுள் 28.5 சதவீதமானோர் ஹிஜாப் உடன் அபாயா அணிபவர்களாகவும், 43 சதவீதமானோர் ஹிஜாப் உடன் அபாயா அல்லாத ஏனையவற்றை (சல்வார், சாரி) அணிபவர்களாகவும் உள்ளனர். அதேபோல 28.5% ஆனவர்கள் மேலைத்தேய நாகரிக ஆடைகளான ஜீன்ஸ் மற்றும் டீ-சேர்ட் அல்லது டொப் போன்றவற்றுடன் தாவணி அணிகின்றனர். இதிலிருந்து பெண்கள் தலை மற்றும் மார்பு பகுதியை கட்டாயம் மறைக்க வேண்டும் என்ற தெளிவு இஸ்லாமிய பெண்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றமை தெளிவாகின்றது. அத்தோடு அவர்களில் எவரொருவரும் பிறரின் கட்டாயத்தின் பெயரில் அல்லாமல் தமது சொந்த விருப்பின் அடிப்படையிலேயே அத்தகைய ஆடைகளை அணிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆய்வின் அடிப்படையில் நோக்கும் போது மாணவர்கள் மத்தியில் நிகாப் (0%) மற்றும் புர்கா (0%) அணிபவர்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அவர்களது ஆடைத் தெரிவு ஒரு காரணமாக இருக்கும் அதேவேளை குறித்த பல்கலைக்கழகத்தில் காணப்படும் ஆடைக் கட்டுப்பாடுகளையும் குறிப்பிடலாம். இக்கட்டுப்பாடுகள் குறித்து பெண்கள் அணிய வேண்டிய ஆடைகள் தொடர்பாக விளக்கப்படத்துடனான அறிவிப்பு, கலைபீடத்தின் அறிவித்தல் பலகையில் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய ஆடைகள் தொடர்பாக பிற சமயத்தவர்கள் கொண்டுள்ள கண்ணோட்டம் குறித்து நோக்கும்போது, இஸ்லாமிய ஆடை என்பது பணிவின் ஒரு அம்சமாகும். மிக முக்கியமாக, ஒருவர் நடத்தை, ஒழுக்கம், பேச்சு மற்றும் தோற்றத்தில் பணிவாக இருக்க வேண்டும். ஆடை என்பது மொத்தத்தின் ஒரு அம்சம் மற்றும் ஒரு நபரின் இதயத்தின் உட்புறத்தில் இருப்பதை பிரதிபலிக்கும் ஒன்றாகும். இஸ்லாமிய பெண்களின் ஆடைகள் பல சந்தர்ப்பங்களில் மாற்றுமதத்தினரின் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. இருப்பினும், ஆடைத் தெரிவுகள் ஆண்களினதோ, பெண்களினதோ வளர்ச்சியை தடுக்கக்கூடியனவல்ல. ஆனால் பிற சமூகத்தவர்களின் பார்வையில் இஸ்லாமிய ஆடையானது, அவர்களை கட்டுப்படுத்துகின்றது என்ற தவறான புரிதல் காணப்படுகின்றமை இவ்வாய்வினூடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட பிறமதத்தை சார்ந்த சிலரிடம் பின்வரும் புரிதல்கள் காணப்பட்டன.

- *இஸ்லாமிய பெண்கள் பிரதான சமூகத்தில் ஒன்றிணையாமை.*
- *அரேபியர்களின் வழிமுறை அல்லது கலாச்சாரத்தை பின்பற்றுகின்றனர்.*
- *பெண்கள் அடக்குமுறைக்கு உட்படுகின்றனர்.*
- *பெண் தெரிவுச் சுதந்திரம் வழங்கப்படாமை.*
- *கருப்பு நிற ஆடை சோகத்தின் வெளிப்பாடு.*
- *இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் அடையாளம்.*

*இவை இஸ்லாமிய பெண்களின் ஆடை தொடர்பான தவறான புரிதல்களாகும். ஆய்வுக்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் மூலம் பெறப்பட்ட தரவுகளை தொகுத்து நோக்கும்போது, இஸ்லாமிய ஆடைகள் பெண்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றன என்ற கருத்தை, மாற்றுமதத்தை சேர்ந்த இருபாலாரும் கொண்டிருந்தனர். இது தொடர்பாக மேலதிகமாக வினவப்பட்டபோது, அவர்கள் வழங்கிய தரவுகளிற்கு அமைய விளக்கப்படம் -01 உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய, 'இஸ்லாமிய ஆடைகள் பெண்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றன' என்ற கூற்றுடன் 11.9 சதவீதமானவர்கள் உடன்படக் கூடியவர்களாகவும், 48.4 சதவீதமானவர்கள் உடன்படாமலும் காணப்பட்டனர். இதில் பெண்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதற்கான காரணங்களாக பிறமதத்தவர்கள் பல்வேறு காரணங்களை குறிப்பிட்டுள்ளனர்.*




*விளக்கப்படம்: 1 - இஸ்லாமிய ஆடைகள் பெண்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றன - பிறமதத்தவர்களின் நோக்கு*

*ஆய்வில் பங்குபற்றிய மாணவர் ஒருவர், இஸ்லாமிய ஆடைகள் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'முஸ்லிம் பெண்களும் இயல்பிலேயே ஏனைய பெண்களைப் போன்று எல்லா உரிமைகளையும், திறமைகளையும் உடையவர்கள். ஆனால் அவர்கள் குறித்த ஆடைக் கலாச்சாரத்தினுள் அகப்பட்டுள்ளதனால் அப்பெண்களது, திறமைகள் வெளிவருவதில்லை. எடுத்துக்காட்டாக இலங்கையின் விளையாட்டுத்துறை மற்றும் பாதுகாபுத்துறை என்பவற்றில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு இன்மையை குறிப்பிடலாம்'. அடுத்ததாக நடுநிலையான கருத்தைக் கொண்டுள்ள 39.7 சதவீதமானவர்களை நோக்கும் போது, 'பெண்கள் அவர்களின் ஆடைகள் மூலம் அடக்கப்படுகின்றார்கள் என்பதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.*

*ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் கல்வி நடவடிக்கைகளில் முஸ்லிம் பெண்களின் ஆர்வம் மற்றும் தேர்ச்சி அதிகரித்துள்ளது என்றே குறிப்பிடலாம். ஆனால் அவர்கள் கலைக் கலாசார நிகழ்வுகளிலும் இவ்வாறான ஆர்வத்தை காட்டுவார்களாயின் அது மிகவும் வரவேற்கத்தக்கது' என்பது நடுநிலையான கருத்தைக் கொண்டுள்ள மாணவி ஒருவரின் கருத்தாகும்.*

***5. முடிவுரை***

*இந்த ஆய்வின் ஊடாக இலங்கையில் இஸ்லாமிய பெண்கள் அணியும் ஆடைகள் தொடர்பாக பிறசமயங்கத்தவர்கள் எவ்வாறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார்கள் என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. அதில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் அடையாளம், பிரதான சமூகத்தில் ஒன்றிணையாமை, அரேபியர்களின் வழிமுறையை பின்பற்றுகின்றமை, பெண்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர், பெண்களிற்கு தெரிவுச் சுதந்திரமின்மை மற்றும் துரதிஷ்டத்தின் வெளிப்பாடு – கருப்பு நிற ஆடை போன்ற தப்பான கண்ணோட்டங்கள் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான தப்பான கண்ணோட்டங்களை இழிவளவாக்கும் நோக்கில், ' Hijab day ' போன்ற தொனிப்பொருளில் மாணவர்கள் மத்தியில் கலாச்சார நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், பெண்கள் தமது ஆடைகளைத் தெரிவு செய்யும்போது பெரும்பாலும் அவற்றின் நிறத்தில் அக்கறை கொள்ளல், கருப்பு நிறங்களைத் தவிர்ந்து கொள்ளல், பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்து பணிபுரியக் கூடிய சந்தர்ப்பங்களில், குறிப்பாக குழுச் செயற்பாடுகளின்போது இஸ்லாமிய வரையறைக்குறப்படும் அதேவேளை தமது ஆளுமைகளை வெளிப்படுத்தல், மற்றும் ஏனைய சமூகத்தவர்களோடு அழகிய முறையில் கலந்துறவாடுவதன் மூலம் அவர்களது சந்தேகங்களைத் தீர்த்தல் போன்ற விதந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

## References

Hass, B.S, & Lutek, H. (2019), *Fashion and Faith: Islamic Dress and Identity in The Netherlands*, Retrieved from https://doi.org/10.3390/rel10060356.

Hakeema Beevi, S., Razick, A. S., & Saujan, I. (2021). Niqāb in Pluralistic Society : An Islamic Perspective. *International Journal of Research and Innovation in Social Science (IJRISS)*, *V*(VII), 47–51.

La Fornara, L.M. (2018), *Islam's (In)compatibility with the West: Dress Code Restrictions in the Age of Feminism*, Retrieved from https://www.jstor.org/stable/10.2979/indjglolegstu.25.1.0463.

Milde Albrecht, Bertha Jacob, (2014), *Female Muslim students' dress practices within a campus context*, Retrieved from https://www.researchgate.net/publication/281583831_Female_Muslim_students'_dress_practices_within_a_campus_context.

Muhammad Hanafia, Anwar Hafidzi & more, (2019), *Islamic Perspective on Students Wearing a Burqa at Universities in Indonesia: Results From a Survey at Three Universities*, Retrieved from https://www.ajpor.org/article/13048-islamic-perspective-on-students-wearing-a-burqa-at-universities-in-indonesia-results-from-a-survey-at-three-universities.